உ

சிவமயம்



சுன்னாகம் வரியப்புலம்

அமரர்

# கார்த்திகேசு ஐயம்பிள்ளை

அவர்களின்

# நினைவு மலர்

10.11.1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அஞ்சலி

எல்லை யில்பரம் பொருளை
எந்நாளும் தொழுது ஏற்றி
வல்லபேர் ஆசான் எனவே
வழியினைக் காட்டி நின்று
எல்லோர்க்கும் நல்லோ னாகி
ஏறு நடை போட வைத்தே
சொல்லாம் சென்ற தெல்லாம்
தூர நின்று நோக்குதற்கே


மனைவி மக்கள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

# கார்த்திகேசு ஐயம்பிள்ளை



மலர்வு
02 - 09 - 1922

உதிர்வு
11 - 10 - 1998

## திதிப் பாடல்

வருடமோ வெகுதானியம் மாத மதோ புரட்டாதி
இரு பத்து நான்குடனே கூடியநாள் - மிருகசீரிடம்
பூர்த்திருந்த வேளையதில் நற்பேறு எய்தினரே
கார்த்திகேசு ஐயம்பிள்ளை காண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# தோத்திரப் பாடல்கள்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் – விநாயகனே
விண்ணுக்கும் மண்ணுக்கும் நாயகனாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்னாமம் என்னாவில் மறந்தறியேன்
உலர்ந்தார் தலையிற் பலிகொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருள்வாய்
அலந்தேன் அடியேன் அதிகைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

## திருவாசகம்

அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடமை எல்லாமும்
குன்றே அனையாய் எனை ஆட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூ றெனக் குண்டோ
எண்டோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எஞ்சிவனைக்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளம்
குளிர என் கண் குளிர்ந்தனவே

## திருப்பல்லாண்டு

பாலுக்கு பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கடல ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## புராணம்

ஆரணச் சுருதியோ சாரடல உருத்திரன் என்று ஏத்தும்
காரணக் கடவுளே ஓலம் கடல் நிறுத்து எந்தாய் ஓலம்
பூரணைக் கிறைவா ஓலம் புக்கலைகணவா ஓலம்
வாரணத் திறை மேற்கொண்டு வருபிரான் ஓலம் ஓலம்
என்றான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகள்

கைத்தல நிறைகனி அப்பமொ டவல் பொரி
கப்பிய கரிமுக னடி பேணிக்
கற்றிடுமடியவர் புத்தியிலுறைபவர்
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடு மரன்மகன்
மற்பொரு திரள் புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
முத்தமிழடைவினை முற்படுகிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புரமெரி செய்த அச்சிவனுறை ரதம்
அச்சது பொடி செய்த அதிதீரா
அத்துயரது கொட சுப்பிரமணிபடும்
அப்புன மதனிடை யிபமாகி
அக்குறமகளுடன் அச்சிறு முருகனை
அக்கணமண மருள் பொருமாளே.

## வரியப்புலம் மகாமாரி அம்பாள் ஊஞ்சல் பாட்டு

### விநாயகர் துதி

பென்னாரும் மணிமுடியாய் திகழ்ந்து மின்னும்
பொலிவளங்கள் சூழதமிழ் ஈழத்தாயின்
மின்னாரும் நுதலெவே மிளிர் யாழ்ப்பாணம்
மிகுந்துமலி மங்களமாம் திலக மன்ன
சுன்னாகப்பதி வரியப் புலத்தில் வாழ்ந்து
சோபன மாய்ச் சுபமருளும் மஹா மாரிக்கே
பன்னாரும் தமிழூஞ்சல் பாடி ஏத்த
பதி விநாயகன் பாதம் காப்ப தாமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவளக்கால் நான்கும் நான் மறைகளாகப்
பன்னிடும்ஆ கமம் வியிர விட்டமாக
புவனியிலே வடம் ஞானக் கலைக ளாக
பிரணவமாம் ஓங்காரம் பீட மாக
தவநிறையும் தமிழஞ்சல் தனிலே வைகி
தண்ணருளைத் தந்தாடும் தாயே மாரீ
சில் மயமாம் தல வரியப் புலத்தி மேவும்
சிற்பரையே மஹாமாரீ ஆடீர் ஊஞ்சல்

காசினியில் பக்தியெனும் கால் நிறுத்திக்
கட்டிணைத்தே புலனைந்தை விட்டமாக்கி
தேசுலவு நாற்கரண வடங்கள் மாட்டி
திருவருளாம் துணையான பலகை கோத்து
பேசுமெழில் சீவனவன் பேரின் பத்தின்
பெறற்கரிய முத்தியெனும் ஊஞ்சலாட
ஆசியருள் நல்வரியப் புலத்தில் மேவும்
ஆரணியே மஹா மாரீ ஆடீர் ஊஞ்சல்

மணிப் பொன்னின் முடியாட மலரும் ஆட
மலர்ந்த திரு வதனதில் அருளும் ஆட
அணிப்பூவின் மணியாரம் மார்பில் ஆட
அலங்காரப் பூங்கூந்தல் விரிந்தே ஆட
பணித்தங்க வளையாட பதக்க மாட
பசு மார்பில் மாங்கல்யம் பதிந்தே ஆட
பிணி தீர்க்கும் தலைவரியப் புலத்தில் மேவும்
பூரணியே மஹாமாரீ ஆடீர் ஊஞ்சல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஞ்சளணி குங்குமமும் மாலை யாட
மன்னு செவிக் குண்டலங்கள் மின்னி ஆட
கஞ்சமலர் விழியருளைப் பொழிந்து ஆட
கரம் அபய வரதங்கள் கனிந்தே ஆட
கொஞ்சு தமிழ் இதழமுதில் இன்பம் பூக்க
குலவு மெழில் நகைபுரிந்து அருளும் தேவீ
மஞ்சுலவு தலைவரியப் புலத்தில் மேவும்
மனோ ஹரியே மஹாமாரீ ஆடீர் ஊஞ்சல்.

மரகதத்தின் பச்சைவன மேனி ஆட
மாலாட அயனாட அரனும் ஆட
உரகவட ஒய்யாரப் படமுமாட
உடுக்கை திரி சூலமொடு கபால மாட
கரகமெனும் வேப்பமிலைக் கும்ப மாட
காற்சிலம்பு கலகலவென் றிசைத்தே ஆட
பரகதியைத் தரும் வரியப் புலத்தில் மேவும்
பார்வதியே மஹாமாரீ ஆடீர் ஊஞ்சல்.

ஆதித்த ஏபயிறு வெண் குடையை ஏந்த
ஆலவட்டம் தனைத்திங்கள் தூக்கி நிற்ப
காதல் தண் மன் மதனும் செவ்வாய் பூக்க
கரகரதி இலை வேம்பு தனைத் தாங்க
கீதத்தை கலைச்செல்வி யாழுன் போடு
கிளர்ந்திடவே வெள்ளியரி யாசனித்தே
பாதத்தை அருள் வரியப் புலத்தில் மேவும்
பராபரையே மஹாமாரீ ஆடீர் ஊஞ்சல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்திருவும் வந்தமர்ந்தோர் வடந்தொட் டாட்ட
செய்யகலை வாணியுமோர் வடந்தொட்டாட்ட
புந்தி மகிழ்ந் தரம்பையரோர் வடந்தொட்டாட்ட
சுந்தரியாம் மஹாமாரீ அம்மை ஆடிச்
சுகுணவருள் தந்தெம்மை ஆண்டு கொள்ள
கந்தமலர்ப் பொழில் வரியப் புலத்தில் மேவும்
கருமாரீ மஹா மாரி ஆடீர் ஊஞ்சல்.

கமல மலர்ப் கழலிணைகள் கருணை யோடு
காசினியில் பக்தருக்கே அருளும் தேவீ
குமுத மலர்ச் செவ்விதழில் முறுவல் பூத்துக்
குறை தவிர்த்து வரமருளும் தாயே காளீ
அமுதமென நின்புகழைப் பாடி ஏத்தும்
அடியவருக் கினிய தெலாம் அருளும் மாயே
தமிழமுதத் தலைவரியப் புலத்தில் மேவும்
தயாபரியே மஹாமாரி ஆடீர் ஊஞ்சல்.

முன்னொருநாள் கொடுமரக்கன் மகிஷா சூரன்
முனிவருக்கும் தேவருக்கும் கொடுமை செய்ய
பன்னெடிய திரிசூலப் படையை ஏந்தி
பாயுமொரு சிங்கவா கனத்தில் ஏறி
மின்னலென வந்தரக்கன் மார்பில் ஏற்றி
மிடி செய்த அரக்கர் குலம் மடித்த காளீ
கன்னல் தமிழ் வளர் வரியப் புலத்தில் மேவும்
கருணை மிகு மஹாமாரீ ஆடீர் ஊஞ்சல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியவனின் சோதரியே ஆடீர் ஊஞ்சல்
அம்பிகையே அபிராமி ஆடீர் ஊஞ்சல்
அரனவனின் நாயகியே ஆடீர் ஊஞ்சல்
ஆனந்த பைரவியே ஆடீர் ஊஞ்சல்
அரவணியும் ஆரணியே ஆடீர் ஊஞ்சல்
அடியவருக் கருள் பவளே ஆடீர் ஊஞ்சல்
புரமேஷும் நற் தலவரியப் புலத்தில் மேவும்
புரந்தரியே மஹாமாரீ ஆடீர் ஊஞ்சல்.

பித்தமொடு வாதங்கள் சிலேற்ப னங்கள்
பிணிகள் தனைத் தீர்ப்பவளே ஆடீர் ஊஞ்சல்
பக்தியுடன் தொழுவாரின் நோய்கள் தீர்க்கும்
பராபரியே மஹாமரீ ஆடீர் ஊஞ்சல்
சித்திரையில் அம்மைசின்ன முத்து நோய்கள்
எமக்கென்றும் வராமல் காத்தருளும்
முத்தழகீ தலைவியப் புலத்தில் மேவும்
முதுகாளீ மஹாமாரீ ஆடீர் ஊஞ்சல்

பூசுரரும் ஆவினமும் வாழி! வாழி!
பூமாரி பொழிந்திந்தப் புவியும் வாழி!
தேசு மிகு செங்கோலின் நெறியும் வாழி!
திருமகளிர் கற்பு நெறி ஞானம் வாழி!
பேசு தமிழ் மொழி வாழி சைவம் வாழி!
புவியெல்லாம் மாரியருள் பொலிந்து வாழி
வீசு தமிழ் மணவரியப் புலமும் வாழி!
விளங்கு திரு மஹாமாரீ வாழி! வாழி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

~எச்சரீக்கை~

வரியப்புலம் வாழும் மஹாமாரி எச்சரீக்கை
வாரகியே வந்தே அருள் தாயே எச்சரீக்கை
அரிமாலயன் அருஞ் சோதரி காளீ எச்சரீக்கை
அரநாயகி திரி சூலினி மாரீ எச்சரீக்கை

பரமேஸ்வரி ஜெகதீஸ்வரி நீலி எச்சரீக்கை
பதினாலுல கேத்தும் சக்தி மாயே எச்சரீக்கை
புரிவரீயப் புலம் வாழ்ந்திடும் மாரீ எச்சரீக்கை
புவனேஸ்வரி கருணாநிதி தாயே எச்சரீக்கை

மகிடாசூர மாயே சம்காரிணி எச்சரீக்கை
மஹா தேவனின் மனோகாரணி மாரீ எச்சரீக்கை
அகிலாண்டிடும் சிவனேஸ்வரி ரூபி எச்சரீக்கை
அழகார் புர வரியப்புல மாரீ எச்சரீக்கை

துதிப் போர்க் அருள் நல்கும் தேவீ பராக்கு
துரந்தரியே நிரந்தரியே நீலீ பராக்கு
மதிப்போர்க்கு மகிழ்ந்தருள் செய்வோய் பராக்கு
மகா மாரீ வரியப்புல தாயே பராக்கு

திரிசூல ஏந்திடும்நற் தாயே பராக்கு
தீனதயா பரியே மாயே பராக்கு
அரிமாயன் சோதரியே காளி பராக்கு
அம்பிகையே அபிராமி ஆதீ பராக்கு

சிங்கவா கினி நீயே தேவீ பராக்கு
சிற்பரையே கற்பகமே மாரீ பராக்கு
அங்கயற் கண்ணியே ஆயீ பராக்கு
ஆனந்த பைரவியே சூலி பராக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-லாலி-

வரியப்புல வராளிக் லாலி சுப லாலி
வாராகி வைஷ்ண விக்கு லாலி சுப லாலி
அரியயனார் துதிப்போர்க்கு லாலி சுப லாலி
அம்பிகை மகாமாரிக்கு லாலி சுப லாலி

கரியகண்டன் நாயகிக்கு லாலி சுப லாலி
கருமாரி யம்பாளுக்கு லாலி சுப லாலி
வரிகுழலின் எழிலிக்கு லாலி சுப லாலி
விளங்குதிரி சூலினிக்குகு லாலி சுப லாலி

நாகபடம் அணிபவர்க்கு லாலி சுப லாலி
நாயகி மகா மாரிக்கு லாலி சுப லாலி
எகனவன் தேவியர்க்கு லாலி சுப லாலி
எழிலி வடி வழகியர்க்கு லாலி சுப லாலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கரி ஸாம்பவிக்கு ஜெய மங்களம் - ஜய
சாமுண்டீஸ் வரிக்கு சுப மங்களம்
தங்கிடும் வரியப்புல தாயாம் மகாமாரிக்கு
பொங்கும் புவியதற்கும் பூரணிக்கும் மங்களம்

தாரிணி உமாதேவிக்கு ஜெய மங்களம் - ஜய
தா ஷாயணியம் மைக்கு சுப மங்களம்
பாரினில் வரியப்புல பார்வதி சிவகாமிக்கும்
பத்திசெய்யன்பர்கட்கும் பார்கவிக்கும் மங்களம்

தன் வயல் சூழ் வரியப்புலத் தலத்திற்கும் மங்களம்-ஜய
விண்ணவர்கும் மண்ணவர்க்கும் சுப மங்களம்
பண்ணமுதத் தண்டமிழின் பாவலர்க்கும் யாவருக்கும்
மண்ணிலத்தில் மக்களுக்கும் மாரிக்கும் மங்களம்

மங்களம் - மங்களம் - மங்களம் சுபமங்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# கந்தர் சஷ்டி கவசம்

## செந்தில் மேவும் சரவணன்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக்குக் குதவும் செங்கதிர் வேலோன்ஞ
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடனஞ் செயும் மயில்வாகனார்
கையில்வே லால் எனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக!
நேசக் குறமகள் நினைவோன் வருக!
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக!
சரவண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணப சரஹ வீரா நமோநம
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணபவ வருக வருக!
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசங் குசமும்
பரந்த விழிகள் பண்ணிரண்டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அமைவுடன் சௌவும்
உய்யொழி சௌவும், உயிரையும் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைபெற் றெண்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன் தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழகுடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செககண
மொகமொக மொகமொக மொகமொக மொகனென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேல் முந்து
என்தனை யாளும் ஏரகச் செல்வ!
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன் திருவடியை உறுதியென்றெண்ணும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்தலை வைத்துன் இணையடிகாக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டு கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர்க் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
வடிவேல் லிருதோள் வளம் பெற காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்டமிரண்டும் பெருவேல் காக்க
வட்ட குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தால் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியிணை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணையக
நாபிக் கமலம் நல்வேல் காக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு துமெனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாயப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைப் தொடரும் பிரமராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என் பெயர் சொல்லவும் இடிவிழுந்தோடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைகளுடனே பலகல சத்துடன
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியப் பாவையும் ஒட்டிய செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டாப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெறி
தணலெறி தணலெறி தணலது வாக
விடு விடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னறி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம வலிப்பும் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாது தோட நீ எனக் கருள்வாய்!
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாளரசரும் மகிழ்ந்துற வாகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைத்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தாகுகனே கதிர்வே லவனே!
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமார
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மாமலையுறுந் செங்கல் வராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என் நாஇரக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் ஆடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன்இரட்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற்றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத்துவஜம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவதுவாகி
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப்பவர்கள
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அட்டதிக் குள்ளோர் அமங்கலும் வசமாய்த்
திசை மன்ன ரெண்மர் செயல தருளுவர்.
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதனெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும்மீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியால் காண வெருண்டிடும் பேய்கள்ளு
பொல்லாதவரைப் பொடி பொடியாக்கும்ளு
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்காரத்து அடி
அறிந்து, எனது உள்ளம் அஷ்ட – லட்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்து உணவு ஆகக்
சூரபத்மாவைக் துணித்தகையதனால்
இருபத்தேழ்வாக்கு உவந்து அமுது அளித்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருபரன், பழநிக் குன்றினில் இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி!
என்னைத் தடுத்து ஆட்கொள்ள என்றன உள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனாதிபதியே போற்றி!
குறமகள் மனமகிழ கோவே போற்றி!
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே, இடும்பா போற்றி!
கடம்பா போற்றி கந்தா போற்றி!
வெட்சி புனையும் வேலே போற்றி!
உயர்கிரி கனகசபைக்கு ஓர் அரசே!
மயில் நடனம் இடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் உயர் திரு. கார்த்திகேசு ஐயம்பிள்ளை அவர்களின்வாழ்க்கைச் சுருக்கம்

இந்து மா கடலின் முத்தென அழைக்கப்படும் சிறீலங்காவின் சிரமென விளங்கும் யாழ் குடா நாட்டினது உச்சியாக விளங்குவது சுன்னாகமாம். இச்சுன்னை நகரின் வடதிசையில் மகாமாரி அம்பாளும்: பைரவக் கடவுளும் அன்ன மகேஸ்வரரும்: கிழக்கில் காளியம்பாளும் சிவபூதராயரும்: தெற்கில் சிவபெருமானும் உமையம்பாளும் மேற்கில் பூரணிப்புக்கலை சமேதரராக ஐயனாரும், சந்திரசேகரப் பிள்ளையாரும் காவல் தெய்வங்களாகவும் இடையே வள்ளி தெய்வானை சமேதரராக முருகனும் மக்களுக்கு மனநிறைவு கொடுத்து கருணையுடன் காப்பாற்றுகிறார்கள்.

சிவபூதராயர் சுவாமியை குல தெய்வமாகவும் வாணாப்புலத்தைப் பிறப்பிடமாகவும் கொண்ட திருவாளர் கார்த்திகேசுவும், பைரவர் ஆலயத்தைக் குலதெய்வமாகவும், தில்லைகட்டியைப் பிறப்பிடமாகவும் கொண்ட திருவாட்டி வள்ளிப்பிள்ளையும் செய்த பூர்வபுண்ணியத்தின் பயனாக 1922 ஆம் ஆண்டு புரட்டாதித் திங்கள் 2ம் திகதி உத்தராட நட்சத்திரத்தில் தில்லை கட்டி என்னும் சிற்றூரில் பிறந்தார்.

காலஞ்சென்ற இலட்சுமிப்பிள்ளைக்கு அன்பு தம்பியாகவும் கனக சபைக்கு பாசமிகு அண்ணனாகவும் தன் பெற்றோருடன் மனமகிழ்வுடன் வாழ்ந்தார். அவரது மூன்றாவது வயதில் அன்னையை இழந்தார்.

பின்னர் சுன்னாகம் கிழக்கில் வானாப் புலம் என்னும் சிற்றூரில் வாழ்ந்த தந்தையின் தங்கை சின்னக்குட்டி வரியப்புலத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட கார்த்திகேசுவை விவாகம் செய்தார். அவர்கள் பெற்றெடுத்த ஏக புத்திரி சின்னம்மா. இவரது தங்கையார் நோய்வாய்ப்பட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்தார். சின்னக்குட்டியும் அவரது ஏக புத்திரியும் அன்னையை இழந்த குழந்தைச் செல்வங்களை அகம் மகிழ்ந்து அன்பாக வளர்த்தனர். சின்னக்குட்டியின் அக்கா மகள் தங்கப்பிள்ளை என்பவரும் குழந்தைகளை வளர்த்து வந்தார்கள்.

இவர் தனது ஆரம்பக்கல்வியை மயிலணி சைவமகா வித்தியாலயத்தில் தொடங்கியவர் ஆசிரிய தராதரப்பத்திரப் போட்டிப் பரீட்சைக்கு தோற்றித் தகுதி வாய்ந்த ஆசிரியராக தெரிவாகும் வரை இக் கல்லூரியில் கல்வி பயின்றார். சுன்னாகம் திருஞான சம்பந்த வித்தியாசாலையில் ஆசிரியராக முதல் நியமனம் பெற்றார். பின்னர் ஆசிரிய பயிற்சிக்கலாசாலையில் பயிற்சி பெற்று பண்டாரவளை சென்யோசப் கல்லூரி, கிளிநொச்சி இந்து மகாவித்தியாலயம் இணுவில் சைவமகாஜனா வித்தியாலயம் ஆகியவற்றில் கடமையாற்றி திரும்பவும் தான் கல்வி பயின்று ஆசிரியராக தெரிவாவதற்கு தேவையான அறிவைப் புகட்டிய மயிலணி மகாவித்தியாலயத்துக்கு மாற்றலாகி ஆசிரியராக கடமையாற்றிக் கொண்டிருந்த காலத்தில் அதிபராக பதவி உயர்வு பெற்று சண்டிலிப்பாய் அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் அதிபராக நியமிக்கப்பட்டார். பின்னர் ஆசிரியராக முதல் நியமனம் பெற்ற திருஞான சம்பந்த வித்தியாசாலைக்கு மாற்றலாகி நீண்ட காலமாக இப்பாடசாலையில் அதிபராக இருந்து ஓய்வு பெற்றார்.

தினமும் நற்போதனைகளை இடைவிடாது புன்சிரிப்புடன் ஆதரவாகக் கூறி வளர்த்தன் பயனாக இவர் எல்லா உயிரினிடத்தும் இரக்க குணமுடையவராகவும் உதவி கேட்டு வந்தவர்களுக்கும், தெரிந்தவர்களுக்கும் பண உதவியும், புத்திமதியும் கூறி வந்தார். பிச்சைக்காரர் வீட்டுக்கு வந்தால் பண உதவி மாத்திரமல்லாமல் உணவும் தன்னிடமுள்ள ஆடை அணி முதலியவைகளையும் தானமாக வழங்கி அவர்களுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதைக் குளிர வைத்து அவர்களினால் வாழ்த்தப்பட்டார்.

"செல் விருந்தோம்பி வரு விருந்துயர்க்கும்" செங்குடியில் பிறந்த காலஞ் சென்ற கந்தையா, தங்கம்மா, ஆகியோரின் புதல்வி சிவபூஷனியை 1958 ம் ஆண்டு மங்கல நாண் பூட்டி தன் வாழ்க்கைத் துணைவியாக்கிக் கொண்டார். இவர்களது இல்வாழ்க்கையில் பூத்த செல்வங்களான கலாவாணி, சத்தியவாணி, இரவிச்சந்திரன், ஜெயவாணி, யமுனா, முருகதாஸ் ஆகியோர்களை தன் கண்மணிகளிலும் பார்க்கச் தான் பெற்ற மழலைச் செல்வங்களைச் சிறப்புடன் கப்பாற்றி நற்பழக்க வழக்கங்களையும், தெய்வ பக்தியையும் ஒழுகச் செய்து ஞானமும் கல்வியும் நயம்பட பெற வைத்து கற்றோராலும் மற்றோராலும் புகழ் பட வளர்த்தார். "காலத்தே பயிர் செய்" என்பதற் கிணங்க தங்களது மூத்த மகள் கலாவாணியை நவக்கிரியைச் சேர்ந்த ஆறுமுகம் நவரத்தினத்துக்கும் சத்தியைவாணியை தன் தகோதரியின் கனிஷ்ட புதல்வன் குழந்தைவேல் தயாளனுக்கும், இரவிச்சந்திரன், யமுனாவை வரியம்புலத்தைச் சேர்ந்த காலஞ் சென்ற செல்லத்துரையின் மக்களான கீதா, ஸ்ரீகதிர்காமநாதனுக்கும் பெரியோரும் உற்றாரும் வாழ்த்தும்படி திருமணம் செய்து வைத்தார். இவர்களின் அன்பும் அறனும் கலந்த இல் வாழ்க்கையின் பயனாக நவரத்தினம் கலாவாணிக்கு ஜனனி, நிராகுலன் என்பவர்களும் தயாளன் சத்தியவாணிக்கு விஸ்னா, வர்ஜிதன் என்பவர்களும், இரவிச்சந்திரன் கீதாவுக்கு துஷாராவும் ஹிகதிர்காமநாதன் யமுனாவுக்கு கிஷாந் என்பவரும் பேரப் பிள்ளைகளாக அமைந்தனர். மற்றும் ஜெயவாணியை தன் ஆசிரியப் பணியை தொடரவைக்கும் நோக்குடன் ஆசிரியையாக்கியதுடன் கலைப்பட்டதாரியாக சித்தியடைவதற்கு உறுதுணையாக இருந்து மேலும் ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து கல்வி டிப்ளோமா முதல்ப் பரீட்சையிலும் சித்தியடைவதற்கு காரணகர்த்தாவாகவும் இருந்தார். மேலும் தன் கனிஷ்ட புதல்வன் முருகதாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைப்பல்கலைக் கழகத்தில் கல்விபயில தெரிவாகியிருந்த காலம் நாட்டில் ஏற்பட்ட இடர் காரணமாக லண்டன் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து சிவில் பொறியியலாளராக பட்டம் பெற்று அந்த நாட்டிலேயே தொழில் பார்க்கவும் இயைந்து நின்றார்.

வட புலத்தில் அசம்பாவிதங்களின் கொடூரத்தால் புலம் பெயர்ந்த மக்கள் கூட்டத்தோடு கூட்டமாக மழைக்குமிழி போல் தோன்றி மறையும் அமைதி இடங்கள் பல சென்று குடும்பத்துடன் தற்காலிகமாக தங்கி இறுதியில் இடையூறுகள் பல தடை தாண்டி அம்பாள் அருளால் கொழும்பு தெகிவளையில் குடும்பத்துடன் இருக்கும் தன் மூத்த மகளுடன் இறுதிக் காலத்தைக் கழித்தார். இக் காலம் மூத்த மகளின் ஏக புத்திரியினது பூப்புனித நீராட்டு விழாவுக்கு வருகை தந்திருந்த நெருங்கிய உறவினர்கள் அனைவருடனும் அகம் மலர வரவேற்று அளவளாவி பூரிப்படைந்தார். வெளிநாட்டில் இருக்கும் தான் பெற்ற செல்வ மருமக்கள் பேரப்பிள்ளைகளையும் சிங்கப்பூர் வரவழைத்து இரண்டு வாரங்கள் அளவளாவிய பூரிப்புடன் திரும்பவும் தெகிவளையில் மகளுடனும் பேரப்பிள்ளைகளோடும் இனபந்துக்களுடன் திடகாத்திரமாக மகிழ்வுற்றிருந்தார்.


இவர் தன் குடும்பம், மக்கள் என்று மட்டும் சிந்திக்காமல் தான் சேர்ந்த சுற்று வட்டத்தையும் சிந்தித்ததன் விளைவாக ( (நிரந்தர கட்டிடமில்லாமல் இயங்கிய) சுன்னாகம் வடக்கு சனசமூக நிலையத்துக்கு ஒரு நிரந்தர கட்டிடத்தை உருவாக்குவதற்கு ஊன்றுகோலாக இருந்தார். வரியப்புலம் ஸ்ரீ மகாமாரி அம்பாள் வீதி உலா வரவென ஒரு தேர் உருவாக்க வேண்டுமென சிந்தித்தார். அம்பாள் அடியார்களுடன் ஆலோசித்தார். செயல்வடிவம் அமைக்கும் போது புலம் பெயர்வால் கொழும்பு வந்தவர் வாளாவிராமல் வெளிநாட்டிலுள்ள அம்பாள் பக்தர்களுடன் தொடர்பு கொண்டு நிதி திரட்டி அவ்வப்போது அனுப்பிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வார். அம்பாளின் தேருக்கான அச்சாணிகளை தன் தனிப்பங்களிப்பாக கொழும்பிலிருந்து அனுப்பி வைத்தார். இதை அவர் தன் முதுமைக் காலத்திலும் தேர் திருப்பணிக் குழுவுக்கு உரிய காலத்துக்கு சேர வைப்பதற்காக பாதுகாப்பு அமைச்சின் அங்கீகாரத்தைப் பெறுவதிலிருந்து கப்பல் முகவர் வரைக்கும் அலைந்த போதிலும் சோர்வடையாமல் இருந்தார் என்றால் அது அம்பாளின் அருள்தான். இது அன்னாரின் சேவைகளில் சில. இவ்வண்ணம் ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் திடகாத்திரத்துடனும் மகிழ்ச்சியாக ஓடியாடித்திரிந்தவரின் சந்தோசம் நீண்ட நாட்கள் நீடிக்கவில்லை.

“வினைப் போகமே ஒரு தேகம் கண்டதாய் வினை தான் நீங்கின் தினைப் போதும் நில்லாது உடம்பு” என்பதற்கிணங்க நோய்வாய்ப்பட்டு வருந்தாமல் கொழும்பு தனியார் மருத்துவமனைக்குச் சிகிச்சைக்காக உதவிக்குச் சென்ற மூத்த மகள் மருமகன் இருவருடன் கதைத்த வண்ணம் சென்றவர் அங்கு அனுமதிக்கப்பட்டு இரு மணி நேரத்தில் கூடச் சென்றவர்கள் அதிசயித்து ஏங்கி அழ 1998 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11ம் திகதி அதிகாலை 03.55க்கு இறையடி சேர்ந்தார்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர்

நீர் வளமும் நிலவளமும் நிறைந்த சுன்னாகக் கிராமத்திலே வாணாப்புலம் என்னும் குறிச்சியிலே அமரர் கார்த்திகேசு அவர்களின் மூத்த புதல்வன்தான் அமரத்துவம் எய்திய வயதில் " கற்க கசடறக் கற்பவை கற்பின் நிற்க அதற்கு தக " என்னும் பொய்யா மொழியின் படி கற்று பின் இவ்வாழ்விலே

"மனைத்தக்க மாண்புடையவன் ஆகித்தற் கொண்டான் வளத்தக்கான் வாழ்கைத்துணை" என்று நல் வாழ்கைத் துணையை அடைத்து இல்வாழ்வின் பயனாக நற்பிள்ளைகளை பெற்று

"தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து முந்தி இருப்பச் செமல்"

என்று பிள்ளைகள் எல்லோரையும் நல்ல நிலைக்கு வைத்த பெருமையை உடையவர்.

அவர் " என் குணத்தானாகிய இறைவனை அல்லும் பகலும் துதி செய்து பெரும் தொண்டுகள் செய்து, மயிலனி முருகனின் எட்டாம் திருவெம்பா பூசை தகப்பனைப் போன்று ஒருகுறையும் இல்லாது தாமே செய்து வந்தார். வருஷப் புலம் அம்பாளை தேரில் பவனி வர அரும்பாடு பட்டுக் கொண்டு இருந்தார். அது மட்டும் மல்லாது பொதுத்தொண்டுகளில் நல்ல ஆர்வமும், அனுபவமும் உடையவர்.

"அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம் உடையவர் புறத்த புகழும் இல்" என்று அறத்தைப் பற்றி எல்லோருக்கும் நற்புத்தி சொல்லும் பண்பாளன்.

அன்பினாலே எல்லோருக்கும் " நல்லாய் இருங்கோ" போய் வருகிறேன். என்று கூறி தாமும் நல்லாக வாழ்ந்து நல்ல சுகமாக இறைவனடி சேர்ந்த மகான் ஆவார். அவர்காட்டிய நல்வழியில் பிள்ளைகள் வாழ்ந்துவர அவரது ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல வள்ளி மணவாளனை பிராத்திப்போம்

சாந்தி சாந்தி சாந்தி

சிவ ஸ்ரீ. ச. வரதராஜேஸ்வரக்குருக்கள்
மயிலணி
சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ மஹாமாரி அம்பாள் தேர் திருப்பணிச் சபை.

வாழ்க்கையில் எல்லோருக்கும் எல்லாச் சிறப்பும் ஒருங்கு அமைவது அவர்கள் பூர்வபுண்ணியம். அதிலும் இறைவழிபாடு சிவத்தொண்டு செய்தல் அவரின் நற்தவப்பயன். தமது வாழ்க்கையில் இல்லறத்தை இனிது நடாத்தி முழுநேர சிவத்தொண்டு செய்தவரை காண்பது அரிது. அண்மையில் அமரத்துவம் அடைந்த கார்த்திகேசு ஐயம்பிள்ளை அவர்கள் வரியப்புலமக்கள் எல்லோராலும் விரும்பிப்போற்றப்படும் செயற்கரிய செயல்களை செய்த பெரியார் ஆவார்.

சுன்னாகம் வரியப்புல அம்பாள் சங்காபிஷேகம் நடைபெறும் நாட்களில் ஊர்மக்கள் உதவியுடன் அவர்கள் அகமகிழ நிகழ்வுகளை மேற்கொண்டார். அமரர் எந்நேரமும் ஸ்ரீ மகாமாரி அம்மனையே சிந்தனையில் இருத்தி ஆலய வளர்ச்சிக்கு ஊன்று கோலாக இருந்தார்.

அமரர் மகாமாரிஅம்பாள் தேரிலே வீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலிக்க வேண்டுமென பேரவா கொண்டு அதே சிந்தனையாக செயலிலும் ஈடுபட்டு தேர்த்திருச்சபையை ஆரம்பித்து செயலாளராக சேவை புரிந்தார். கொழும்பு சென்று வாழ்ந்து வந்த போதும் தேர்த்திருப்பணிகளை மேற் கொள்ள மூலாதாரமாக இருந்து வெளிநாடுகளிலுள்ள அம்பாள் அடியார்களிடமிருந்து நிதியை பெறுவதற்கு தன்னால் இயன்ற முழு முயற்சியையும் மேற்கொண்டார்.

பெரும் செல்வமிருந்தாலும் அதை திருப்பணிகள் ஏழைகளுக்கு அளிக்கும் போதே அதன் பயன் புரியும் அதற்கேற்ப தன்னலம் பாராது தன்னிடமுள்ள செல்வமனைத்தையும் மஹா மாரி அம்மனின் வளர்ச்சிக்கே வித்திட்டார். அம்பாள் தேரிலே வீதி உலா வருவதற்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதி எடுப்பதற்கு தன்னால் இயன்ற உதவிகள் முழுவதையும் மேற்கொண்டார்.

1998ம் ஆண்டு ஐப்பசி மாதம் 11ம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரியப்புல வாழ் மக்களுக்கு ஒரு அமங்களகரமான நாளாக விடிந்தது. நல்லவர்களது ஆயுட்காலம் குறுகியது. அன்னார் இறைபதமடைந்த செய்தி கேட்டு வரியப்புல அன்னை தனது மைந்தனை இழந்து சோக வெள்ளத்தில் மூழ்கினாள். தேர்த்திருச்சபை "பசுவை இழந்த கன்று போல" தனது ஆணிவேர் அறுந்து அனாதரவு அடைந்தது.

அமரரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அநுதாபங்களை தெரிவிப்பதுடன் அம்மாவின் பாதாரவிந்தங்களில் அவரது ஆத்மா சாந்தியடையும் வண்ணம் வரியப்புலம் மக்கள் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

| | |
|---|---|
| வரியப்புலம் | பொ. மனமோகன் |
| சுன்னாகம். | ஹரீ மகாமாரி அம்பாள் தேர் |
| 17-10-1998 | திருச்சபை. |
| | தலைவர் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் குருநாதர்

அமரர் ஐயம்பிள்ளை உபாத்தியாயர் என் உறவினர். மாமன், முறையானவர். ஆனால் நான் அவரை 'மாமா' என்று விளிப்பதிலும் பார்க்க என் குருநாதர் என்று அழைப்பதிலேயே பெருமைப்படுகிறேன்.

"தாரமும் குருவும் தலை விதிப்பயன்" என்பர் விசயமறிந்தோர். யாழ் சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலையில் எனது ஆரம்பக்கல்வியைப் போதித்தவர் அமரர் அவர்களே. எண் கணிதம் எனக்கு வேப்பங்காய் போல் கசந்தது. அதை இனிமையாக்கியவர் ஐயம்பிள்ளை உபாத்தியார் அவர்களே. என்னைப் போன்ற பலருக்கும் விருப்பத்தோடு கற்பித்தார். அக்காலத்தில் தமிழ் இலக்கியம் தனிய ஒரு பாடநெறியாக இருந்தது. வீட்டில் மின் விளக்குகள் இல்லாத காலமது. நில வொளியில் கண்ணாடி விளக்கு வெளிச்சத்தில் தமிழ் இலக்கியத்தைக் கற்பித்த நினைவு இன்றும் பசுமையாக இருக்கின்றது. அவர் இட்ட பிச்சையால் ஓரளவு இலக்கியபாடம் இனித்தது. S.S.C பரீட்சையிலும் சிறப்புச்சித்தி கிடைத்தது. பின்னர் நான் புரிந்த ஆசிரியத் தொழிலுக்கும் பெரும் உதவியாக இருந்தது.

என் தொழிலுக்கு வழிகோலிய புண்ணியமும் அவரையே சாரும். அவர் பண்டாரவளை, அர்ச்ச சூசையப்பர் கல்லூரியில் படிப்பித்த காலத்தில் அவரின் வீட்டுக்கு நானும் அவருடன் நெருங்கியவர்களும் போவோம். எல்லோருக்கும் மதிய உணவு அளித்து விருந்தோம்பும் பண்பும் அன்பும் உடையவர். இவ்வாறு இவர் உபசரித்தமைக்கு உறுதுணையும் அன்புகாட்டவும் நல்ல வாழ்க்கைத்துணைவியையும் பெற்றிருந்தார். இல்லறத்தை நல்லறமாக்கினார்

எனது வாழ்க்கையில் திருமணப்பருவத்தில் ஏற்ற வாழ்க்கைத்துணைவியைத் தேடித்தந்தவர் என் குருவே. அவர் காட்டிய வழியில் நடந்தமையால் சீரும் சிறப்பும் பெற்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது நல்ல மனம் போல நல்லபிள்ளைச் செல்வங்களைப் பெற்றார். அவர்கள் எல்லோரும் தந்தை மேல் பற்றும் பாசமும் உடையவர்கள். சீரும் சிறப்புமாக வாழ்கிறார்கள். மூத்த மருமகன் இவரின் மகன் போல் இருந்து கருமங்கள் ஆற்றுகின்றார். நிறைந்த வாழ்வு பெற்றார். இவரின் குல தெய்வங்களான சீவபூதராயரும் வரியப்புலம் அம்பாளும் ஏதேனும் குறைகள் இருந்தால் நிவர்த்தி செய்வார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

பிறரிடம் குறைகுற்றம் காணும் பொழுதும் "தாலியக் கட்டுவானே" என்று மங்கலகரமாகவே கண்டிப்பார். அமரர் சீரிய ஒழுக்கமும் சிறந்த பண்பும் கொண்டவர். பலராலும் மதிக்கப்பட்டவர். தனது வாழ்க்கைத் துணைவியைத் தேடிய ஊரில் சனசமூக நிலையம், அம்பாள் ஆலயம் என்பவற்றில் தொண்டாற்றினார். அவருடைய சீரிய வாழ்க்கையின் பயனாக நோய்கள் அவரை அணுகவில்லை. பிற்காலத்தில் இருதய நோயால் பீடிக்கப்பட்டவர், அதிககாலம் வருந்தவில்லை. திடீரென காலன் அவரது உயிரை கவர்ந்து சென்றுவிட்டான். என் மீது உள்ள அன்பு கொண்ட இரு ஜீவான் மாக்கள் பரமாத்மாவை அடைந்து விட்டன. "எல்லாம் எப்பவோ முடிந்த காரியம்" என்கிறார், யோகர் சுவாமிகள். அவரின் பிரிவால் வாடும் இராம லக்குமணர் என்ற ஒற்றுமையின் சின்னமாய் வழ்கின்ற அமரரின் சகோதரன், மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் ஆறுதல் அடைய இறைவன் அருள் புரிய வேண்டும்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி !!!

ஓய்வு பெற்ற ஆசிரியர்
சி. முத்துக்கிருஸ்ணர்
கந்தரோடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹா மாரி அம்மன் துணை

அன்பு நிறைந்த கனிந்துள்ளமும், பண்புமிக்க அமைதியான நடையும், சிந்தித்துச் செயலாற்றுந்திறனும், அன்புப் பேச்சாலும் அன்புள்ளத்தைப் படம் பிடித்துக் காட்டும் அழகிய புன்முறுவலாலும் எல்லோரையும் தம்பாலீர்க்கும் திறமும், ஒருங்கமைந்த ஒரு பெரியவர். நம் முன்வாழ்ந்தார். அவர் தான் அமரர் திரு. கார்த்திகேசு ஐயம்பிள்ளை உபாத்தியார்.

உபாத்தியாயரவர்களுக்கு வரிசப்புலம் மகாமாரி அம்பாள் ஆலயமும், யாழ்/ சுன்னாகம் திருஞான சம்பந்த வித்தியாசாலையும் இரு கண்கள் போன்றவை. நோய் பிணியெதுவரினும் "இம்மையே தருஞ் சோறுங் கூறையமத்தலாமிடர் கெடலுமாம். அம்மையே சிவ லோக மாள்வதற்கு யாதுமையுறவில்லையே" என்றருளிய சுந்தர சுவாமிகள் வழியில் இறையருளைப் பற்றி வாழ்ந்தவர்.

அண்மைக் காலம் போரனர்த்தங்கள் காரணமாக கொழும்பிற்கேகிய அவர், அங்கிருந்து கொண்டும் வரியப்புலம் மகாமாரி அம்மன் ஆலய சித்திரத்தேர் அமைக்கப்படவேண்டும் என்ற பெருவிருப்புடன் எடுத்த முயற்சிகள் யாவினையும் பலர் கூறக் கேட்டிருக்கின்றேன்.

ஆலய வளர்ச்சியில் எத்தகைய ஆர்வமிகுதி காணப்பட்டதோ? அதேயளவு ஆர்வம் பாடசாலை வளர்ச்சியிலுங் காணப்பட்டது. பாடசாலை என்பது சமூகத்தின் அறிவுக்கண்ணைத் திறக்குமிடம். அத்துடன் உடல், உள ஆன்மீகவுயர்ச்சிகளுக்கான பல்வேறு அம்சங்களையும் திரட்டிக் கொடுக்கும் ஸ்தாபனம்" என்பது ஆசிரியப் பணி புரிந்து வந்த உபாத்தியாயரவர்களது முழுநம்பிக்கை. எனவே பாடசாலையிலும், மழலைபேசும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டிலும், விளையாட்டு முதலான பிறசெயற்பாடுகளின் வளர்ச்சியிலும் அதிக கவனம் செலுத்திவந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பாடசாலையில் 1992ம் ஆண்டு விளையாட்டுப் போட்டியை நடாத்துவதற்கு மைதானமின்மை முட்டாயிருந்த போது தமது வீட்டுவளவிலிருந்த வாழைத்தோட்டத்தையே வழங்கி அதில் மாணவச் செல்வங்கள் விளையாடுவதைக் கண்டு வள்ளுவரின் "ஈந்துவக்கும் இன்பத்திற்கு" இலக்கணமானவர். இவரும் இவரது அன்புப் பாரியாரும், பிள்ளைகளும் எம்மோடு தோள் நின்றுழைத்த செயல்கள் மிகப்பல.

உபாத்தியாயர் குடும்பத்தோடு கொழும்பு சென்றமைக்கிரங்கி வாழ்ந்த நாம் இன்று உபாத்தியாயரவர்கள் அமரராகி விட்டமை கேட்டு ஏங்குகின்றோம்.

"நெருநல் லுளனொருவன் இன்றில்லையென்னும்
பெருமையுடைத்து இவ்வுலகு" எனும் வள்ளுவர் திருவாக்கே நமக்கு ஆறுதலளிக்கின்றது.

அன்னாரது ஆத்மா நித்திய சுகமேவியின்புற எல்லாம்வல்ல இறையருளைப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

வி. ஏகாம்பர மூர்த்தி
அதிபர்
யாழ்/ சுன்னாகம்
திருஞான சம்பந்த வித்தியாலயம்
சுன்னாகம்

19-10-1998

## நினைவுகளில் தினம் வாழும் அமரர் கா. ஐயம்பிள்ளை உபாத்தியாயர்

வெள்ளை வேஷ்டியும் நஷனலுமாக எல்லோரையும் கொள்ளை கொள்ளும் வண்ணம் அந்த மென்மையான புன்னகையோடு பண்டாரவளை சென் ஜோசப் கல்லூரியில் ஆசிரியனாக சேவை புரியும் நோக்கில் ஆண்டவனின் அழைப்பை ஏற்று அரும்பணி ஆற்ற வந்தார் அமரர் கா.ஐயம்பிள்ளை அவர்கள்.

சங்கத் தமிழை இனிமையுடன் புகட்டுவதற்கே அவரில் அவர் தான் நிகர். தமிழிலும் இனிய மொழி உண்டோ! இவர் மாணவருக்கு கற்பிக்கும் போது கரும்பு தின்னக் கைக்கூலி வேண்டுமா ..? என்பது போலிருக்கும் தமிழ் மட்டும் என்ன சமய, சமூக, அரசியல் கணித அறிவிலும் சளைத்தவர் அல்ல என்பதையும் அவரின் அறிவு கலந்த பேச்சால் அறிய முடிந்தது.

இவரின் இல்லறத் துணைவியாக திருமதி சிவபூசனி அம்மாள் 1958ம் ஆண்டு இறைவன் சந்நிதியில் கரம்பற்றிக் கொண்டார். இவர் சாதாரண கல்வி பெற்றவராயினும் தன் அன்புக் கணவனின் சேவை சிறக்க முழுமூச்சுடன் துணை நின்றார்.

முன்னேற்றப்பாதையில் முன்னேறிச் செல்கையில் சந்திக்கும் எதிர்ப்புக்களைக் கண்டு பயந்து ஓடி விடவில்லை. எதிர் நீச்சலடிக்கும் தன்மை படைத்தவர் எதையும் இலகுவாகக் கணித்து எந்தப் பொறுப்பையும் துணிவுடன் ஏற்று மன உறுதியுடன் செயற்படும் உள்ளம் கொண்டவரே அமரர் கா. ஐயம்பிள்ளை அவர்கள்.

ஐயம்பிள்ளை என்றதும் எம் கண்முன் தோன்றுவது அவரின் அன்பான புன்னகை கலந்த அந்த முகமே! அகத்தின் அழகு முகத்தில் பிரதிபலிக்கும் என்பதற்கேற்ப அவரது நற்குணங்களும், மன அமைதியும் சேர்ந்து இளமையையும், கம்பீரத்தையும் கொடுக்க தவறவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரிய சேவைக்கு இலக்கணம் கூறும் வகையில் சொல்லால் மட்டும் இவர் வாழவில்லை. தன் ஒவ்வொரு செய்கையாலும், நடத்தையாலும் முன்மாதிரியாகவே தன் வாழ்நாளில் நடந்தார்.

இன,மத பேதமற்று சிங்கள, முஸ்லிம், தமிழ் தன் சகோதரர்களாக ஏற்று அன்பு காட்டியதால், சிறுவர் தொடக்கம் பெரியவர் வரை எல்லோரும் விரும்பும் ஒரு உத்தமராக திகழ்ந்தார்.

ஆசிரிய சேவையில் மட்டுமன்றி சமய, சமூகப் பணிகளில் பெரும் ஈடுபாடு கொண்டு பல அமைப்புகளிலும் பொறுப்பேற்று தனக்கு வழங்கப்பட்ட பொறுப்பை எந்தக் கஷ்டம் வந்திடினும் முழு மூச்சாக நின்று உழைக்கக்கூடியவர் என்ற நன்மதிப்பைப் பெற்றவர்தான் அமரர் கா. ஜயம்பிள்ளை.

பகவத் கீதையில் பகவான் கூறியதற்கு ஏற்ப வாழ்ந்த உத்தமர். "கடமையை செய் பலனை எதிர்பாராதே" இக் கொள்கையை சிரமேற் கொண்டு உயர்ந்த மாணவ சமூகத்தை வழங்கியவராவார்.

ஆசிரிய சேவையில் மடடுமன்றி இல்லறத்தில் தன் கடமையை ஒழுங்காக நிறைவேற்றி அன்பு நல்மக்களைப் பெற்று அவர்களை அவை நடுவே முந்தியிருக்கச் செய்து பெருமை பெற்றவர்.

நித்தமும் நின் நினைவுகளில் வாழும் நாம் எமை ஆழாத் துயரில் ஆழ்த்தி மீளாத் துயிலில் நீ சென்றாலும் உன் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

சி.மு.கந்தையா
குடும்பத்தினர்
தெகிவளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாளர் கா. ஐயம்பிள்ளை அதிபர்
## திருஞான சம்பந்த வித்தியாசாலை
## நினைவு அஞ்சலி

எம் கண்ணில் மணியாக ஒளிக்கும்
அருமைச் சகோதரனே!
எம் இதயத்தில் பாசமலராக, மணம்பரப்பும் குணனே!
மனங்களில் நிறைந்து நினைவாகிப் போனவனே,
மக்களுக்கெல்லாம் பாசமிகு தந்தையே,
மனைவியின் பாசமிகு குடும்பத் தலைவரே,
பள்ளி மாணவர்க் கெல்லாம் நல்ல தோர் ஆசானே,
நன்பர்களுக்கெல்லாம் என்றும் இனியவனே,
சகோதரங்களில் பாசமிகு சகோதரனே,
இல்லையென்று சொல்வார்க்கு இரங்கிடும் தெய்வமே,
எப்போதும் நினைப்போம் என்றும்மறவோம் ஐயா,
எம்மைக்காக்கும் அம்பாளின் தேர் ஓடவென்றே,
தேசமெல்லாம் பணம் சேர்த்து நின்றாய் என்றும்,
தேர் ஓட வழி செய்து அச்சு அனுப்பி வைத்தாயே
தேவி உம்மைத் தேரோடுமுன் அழைத்திட்டா அருகில்
அருள் சுரக்கும் மணியோசை ஒலிக்கும் என்றும்
அறம் காத்தமகனே அருகிருந்து பார் ஐயா தேரை

ஆக்கம் மா. தவமணி

184 Perryrise
LONDON S.E.23 - 1QT
U.K.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# உயர்ந்த பண்பாளர்
# அதிபர் - அமரர் ஐயம்பிள்ளை

சுன்னாகம் வரியப்புலம் மகாமாரி அம்மன் ஆலய அறக்காவலரில் ஒருவராகவும், சுன்னாகம் திருஞான சம்பந்தர் வித்தியாசாலையின் உன்னத தலை மகனாகவும் விளங்கிய எனது மதிப்புக்குரிய பெருந்தகை ஐயம்பிள்ளை ஆசானின் மறைவுச் செய்தி கேட்டு திடுக்குற்றேன். எனது வளர்ச்சியில் மிகுந்த ஆர்வம் கொண்ட இப்பெருந்தகை தனது குலதெய்வத்தின் சந்நிதானத்தில் எனது முதலாவது தொடர் விரிவுரையை ஏற்படுத்தி என்னை ஆசீர்வதித்தார். பலதுறையிலும் என் அன்புக்குப் பாத்திரமாக விளங்கிய அமரர் இறப்பதற்கு இருதினங்களுக்கு முன்பும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அன்பாக உரையாடினார். திருஞானசம்பந்தர் வித்தியாசாலை பற்றியும், மகமாரி அம்மனின் தேர்த்திருப்பணி பற்றியும் அவர் நீண்ட நேரமாகப் பேசினார். கொழும்பில் உரையாற்ற வந்த நான் இருதினங்களில் நேரில் சந்திக்க வருகிறேன் என்று கூறி சந்திக்க ஆவல் கொண்டேன். விதி விடவில்லை. இரு தினங்களில் அவரது மௌனமான திருவுடலுக்கு அஞ்சலி செய்யும் பேறு மட்டுமே பெற்றேன். அவரது இழப்பு சுன்னாகம் வாழ் மக்களுக்கு பேரிழப்பாகும். மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்த புனித ஆத்மா இறைவன் திருவடியை அடையும் என்பது எனது நம்பிக்கை.

அமரரின் ஆத்மா சாந்தி பெற பிரார்த்திக்கிறேன்

"பாலாவி"
ஆறு. திருமுருகன்
இணுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயல் வீரர்

எமது கிராம மக்களின் அறிவு வளர்ச்சியிலும் அபிவிருத்தியிலும் ஆன்மீக ஈடேற்றத்திலும் மிகுந்த அக்கறை கொண்டு விளங்கிய அமரர் கா. ஐயம்பிள்ளை அவர்கள் எமது சனசமூக நிலையத்தை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக விளங்கியதன் மூலம் தமது நோக்கத்தை நிறைவேற்ற போதனையுடன் மட்டுமன்றி செயல்வடிவாக்க அரும் பாடுபட்டு வெற்றிகண்ட ஒரு செயல் வீரனும் பெருந்தகையுமாவார். அமரர் நிலையத்தின் தலைவராக தொண்டாற்றிய காலத்தில் நிலையம் முன்னேற்றகரமான பல சிறப்பு மாற்றங்களுக்கு உள்ளானது குறிப்பிட வேண்டிய அம்சமாகும்.

எமது சனசமூக நிலையம் செயற்பட்டு வந்த தற்காலிக கொட்டகையும் சேதமடைந்திருந்த ஒரு இக்கட்டான நேரத்தில் நிர்வாக சபையில் தொண்டாற்ற எவரும் முன்வராத தருணத்தில், கிராம மக்களின் ஏகோபித்த வேண்டுகோளுக்கிணங்க அமரர் தனது தலைமைப் பொறுப்பைத் துணிவுடன் ஏற்றுக்கொண்டார். அடுத்த கணமே நிலையத்திற்கு நிரந்தரமான விசாலமான கட்டிடம் அமைக்கும் பணியில் துரிதமாகச் செயற்பட்டார். கட்டிட வேலைகள் ஆரம்பிக்கும் பொழுது எதிப்பார்த்திராத எதிர்ப்புக்கள் வந்தன. அவற்றையெல்லாம் தனது அநுபவ முதிர்ச்சியாலும், மதிநுட்பத்தாலும் சமாளித்து நிலையத்தின் முக்கியத்துவத்தை அனைவருக்கும் உணரச் செய்து அனைவரினதும் மன விருப்பத்துடனும் ஒத்துழைப்புடனும் வேலைகளை ஆரம்பித்தார். செலவுகளைச் சுருக்கும் பொருட்டு கூடிய வேலைகளை, கிராமத்து இளைஞர்களை அரவனைத்து, தானும் ஒரு இளைஞனாக நின்று சிரமதானம் மூலம் நிறைவேற்றினார்.

நாட்டு நிலைமைகள் குழப்பமடைந்து இருந்தபோது நிலையத்தை தொடர்ந்து இயங்கச் செய்து, நிலையத்தில் நூலக சேவையை ஆரம்பித்து பல புத்தகங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவில் இருந்து பெற்று சிறப்பாக நூலக சேவை நடைபெற உதவினார். அமரரின் சேவையைச் சொற்களில் அடக்கி விடமுடியாது. அசையாத இறைபக்தி மூலம் அவர் பெற்ற துணிவும் தன்னம்பிக்கையுமே அவரின் செயற்பாடுகளுக்கு உதவுகோல்களாக அமைந்தன. அமரரின் வழியில் அவரது குடும்பமும் தொடர்ந்து ஈடுபடும் என்ற நம்பிக்கையுண்டு. உறுதியான நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட அவரது செயற்பாடுகள் தொடர்ந்தும் வளர்ச்சிகான உழைப்பதுவே நாம் அன்னாருக்கு செலுத்தும் அஞ்சலிகள் ஆகும்.

அன்னாருடைய மறைவு உன்னத மனித நேயம் படைத்த உத்தம சீலர் ஒருவரின் இடைவெளியை எம்மத்தியில் ஏற்படுத்தியுள்ளமை ஆழ்ந்த கவலைக்குரியதொன்றாகும். அமரரின் குடும்பத்தினர்க்கு எமது அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம். அமரரின் ஆண்ம ஈடேற்றத்துக்கு இறையருள் வேண்டிப் பிராத்திக்கின்றோம்.

சுன்னாகம்வடக்கு
சனசமூகநிலையம்,
வரியப்புலம்.

## வாழ்வாங்கு வாழ்ந்து வழிகாட்டிய பெரியார்

சுன்னாகம் வரியப்புலம் ஸ்ரீமகாமாரி அம்பாளின் வளர்ச்சிக்கு அத்திவாரமிட்டு அவ்வாலயத்தின் செயலாளராகவும், பொருளாளராகவும் இருந்து செயற்பட்டு அம்பாளின் முன்னேற்றத்திற்காக அல்லும் பகலும் அயராது உழைத்து வாழ்ந்தவர் காலஞ் சென்ற உயர்திரு கா. ஐயம்பிள்ளை அவர்கள்.

அம்பாளை அழகான இரதத்தில் ஏற்றி சிங்காசனத்தில் இருத்தி வீதி உலா வரச் செய்ய வேண்டும் என்று பேரவாவுடன் செயற்பட்டு தேர்த்திருப்பணிச்சபையை அமைத்து, வேலைகளை ஆரம்பித்த பெருமை திருவாளர் ஐயம்பிள்ளை அவர்களையே சாரும். அம்பாளின் தேர்த்திருப்பணிக்கு வெளிநாட்டில் உள்ள எம்மக்களோடு தொடர்பு கொள்வதற்காகவும், நிதி சேகரிப்பதற்காகவும் இவர் கொழும்பில் தங்கியிருக்க வேண்டியதாயிற்று.

ஒரு கிராமத்தில் இரு கண்களாக விளங்குவது பாடசாலையும் ஆலயமும் ஆகும். ஆனால் எங்கள் கிராமமாகிய வரியப்புலத்துக்கு வாசிகசாலையையும் சேர்த்து சிவபெருமானுடைய முக்கண்கள் போன்று வரியப்புலத்துக்கு முக்கண்களாகிய பாடசாலை, அம்பாள் ஆலயம், வாசிகசாலை ஆகிய மூன்றிற்கும் முறையே அதிபராகவும், பொருளாளராகவும், செயலாளராகவும் இருந்து கிராமமக்களுக்கும் இக்கிராம இளைஞர், யுவதிகளுக்கும் அறிவையும் இறைபக்தியையும் வளர்த்த பெருமை எங்கள் அமரர் திருவாளர் கா. ஐயம்பிள்ளை அவர்களுக்கே உரியதாகும்.

அம்பாளின் தேர் வேலைகள் பூர்த்தியானதும் அம்பாள் தேரில் ஏறி வீதி உலா வருவதையும் அம்பாளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்வடத்தைப்பிடித்து இழுத்து வரும் காட்சியைப் பார்ப்போம் என வரியப்புலவாழ்மக்கள் ஆவலோடு எதிர்பார்த்து இருந்தார்கள். ஆனால் அதற்கிடையில் காலன் அன்னாரின் உயிரைக் கவர்ந்து சென்றுவிட்டான். எண்ணோ வாழ்க்கையின் விந்தை

"குடம்பை தனித் தொழியப் புட் பறந்தற்றே
உடம்பொடு உயிரிடை நட்பு"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் குறளுக்கே இணங்க அமரர் திருவாளர் கா. ஐயம்பிள்ளை அவர்களின் ஆவி அவரது உடலைவிட்டுப் பிரிந்தாலும், அன்னார் செய்த திருப்பணிகளும் சேவைகளும் என்றென்றும் நிலைத்திருக்கும் என்பதற்கே ஐயம் இல்லை .

தலைவனைப்பிரிந்து தவித்து ஏங்கும் அன்னாரது பாரியாருக்கும், பிள்ளைகளுக்கும், மருமக்களுக்கும், பேரப்பிள்ளைகளுக்கும் அம்பாளின் திருவருள் நிரம்பக்கிடைக்கப் பிரார்த்திப்போமாக

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

நிர்வாக சபை
வரியப்புலம் ஸ்ரீ மகாமாரி
அம்பாள் தேவஸ்தானம்
சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறவாழ்வு வாழ்ந்த ஐயம்பிள்ளை மாஸ்டர்

அன்புடனும் பண்புடனும் வாழ்ந்த பிறர்நலன் கருதி அயலவர்களையும், உறவினர்களையும் அணைத்து உற்ற நேரத்தில் உதவி செய்து பொதுப்பணிகளிலும் ஈடுபட்டு சீரிய நெறியிலே வாழ்ந்தவர் அண்மையில் இறைவனடி சேர்ந்த ஐயம்பிள்ளை மாஸ்டர் அவர்கள். அன்னார் எமது தந்தையாருடனும் மிகவும் நெருக்கமாக இணைந்து மயிலணி கந்தசாமி கோயில் திருப்பணியில் ஈடுபட்டது மட்டுமல்ல, பஜனைக் குழுவில் முக்கிய அங்கத்தவராகவும் விளங்கினார். எமது தந்தையார் மறைவுக்குப்பின் அத்தொடர்பு நீடிக்கலாயிற்று. அன்னார் மட்டுமல்ல அவருடைய சகோதரர்களும், அவருடைய நெருங்கிய உறவினர்களும் எங்கள் அன்புக்கு பாத்திரமானவர்கள்.

சமூகத்தில் ஒருவருக்கு நன்மதிப்பு ஏற்படுவதற்கு காரணம் அவருடைய கல்வி, பதவி, அந்தஸ்து, பணம் என்பன மட்டுமல்ல எல்லாவற்றுக்கும் மேலாக ஒருவருடைய நற்பண்புகளே என்றால் வியப்பிள்ளை. அமரத்துவம்அடைந்தஐயம்பிள்ளை மாஸ்டர் அவர்கள் அறச்சிந்தனை மிக்கவர். எழுத்தறிவித்தவன் இறைவனுக்கு சமமாக கருதப்படுவான் என்பது அறிஞர் கருத்து. படிக்க வசதியற்ற பல மாணவர்கள் பழமரத்தை நாடிவரும் பறவைகள் போல் ஐயம்பிள்ளை மாஸ்டரைச் சென்றடைந்து அறிவைப்பெருக்கி அறச்சிந்தனை உடையவர்களாக நல்லொழுக்கம் மிக்கவர்களாக விளங்குவது அன்னாருடைய பயன் கருதா பணிக்கு ஒரு எடுத்துகாட்டாகும். துன்பப்படுபவர்களுக்கு ஆறுதல் வார்த்தை கூறி, நலிந்தவர்களுக்கு நல்லுரை வழங்கி தேவை ஏற்படும் பொழுது நிதிஉதவி செய்தும் அரும்பணியாற்றினார். அவருடைய அன்பு காரணமாக எல்லோரும் ஐயம்பிள்ளை மாஸ்டர் என்றும் மாஸ்டர் என்றும் அழைப்பதுண்டு. ஆலயங்களிலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுநிகழ்ச்சிகளிலும் மாஸ்டரும், அன்னார் தம்பியார் கனகசபை மாஸ்டரும் இரட்டையர்கள் போன்று இணைந்து செயற்படுவது தனிச்சிறப்பானது. அண்ணாவும், தம்பியும், அருமைச்சகோதரியும் பாசத்தால் பிணைக்கப்பட்டு பணிவாகவும், பரோபகார சிந்தனையுடனும் வாழ்ந்து எல்லோருக்கும் ஒரு முன்மாதிரியாக விளங்கினார்.

ஆசிரியராக தனது வாழ்க்கையை ஆரம்பித்த மாஸ்டர் அரசசேவையிலிருந்து ஓய்வு பெற்ற பின் ஆலயப் பணியில் தனது முழுநேரத்தையும் அர்பணித்தார். ஆலயங்களில் நடைபெறும் புராணபடணம், திருமுறைமுற்றோதல், திருவாசகம் முற்றோதல் ஆகிய நிகழ்ச்சிகளில் பக்தியுடனும் மிக ஆர்வத்துடனும் ஈடுபட்டார். தற்போதய காலகட்டத்தில் சமூகத்தில் பணியாற்றுவதற்கு தன்னை முற்றாக அர்பணிக்கத்தக்கவர்களும், பயன் கருதாது பணியாற்றத்தக்கவர்களுமே தேவை இந்த உயர்ந்த பண்பு அருகி வருகின்ற சமயத்தில் மாஸ்டர் எங்களைப் பிரிந்தது மிகுந்த கவலைக்குரியது.

வரியப்புலம், ஸ்ரீமகாமாரி அம்பாள் பரிபாலன சபையின் பொருளாளராகவும், சனசமூக நிலையப் பொருளாளராகவும், ஸ்ரீ மகாமாரி அம்பாள் தேர்த்திரப்பணிச்சபை செயளாளராகவும், பல்துறைப் பணியாற்றியுள்ளார். தனது சொந்தக் கிராமத்தை விட்டுப் புறப்பட்டு பல இன்னல்களை அனுபவித்து கொழும்பு சென்று வாழ்ந்த போது தான் மேற் கொண்ட திருப்பணியையும் தனது பங்களிப்பையும் சிரமேற்கெண்டு அதற்கான நியதியை ஏற்படுத்தியபின் அமரத்துவம் எய்தியது அவர் பெற்ற அம்பாள் திருவருளை எடுத்துக்காட்டுகிறது.

சென்ற வருடம் வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷனில் நாங்கள் அமரத்துவம் அடைந்த மாஸ்டரை சந்தித்தபொழுது நல்ல உடல்நலத்துடனும், மகிழ்ச்சியுடனும் காணப்பட்டார். கொழும்பில் நடைபெறும் சமயநிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதுதான் தனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுதுபோக்கு எனக் கூறினார். மிக ஆர்வத்துடன் தேர்த்திருப்பணியில் ஈடுபட்டு 21-10-98ல் நடைபெறும் தேருக்கு அச்சாணி வைக்கும் வைபவத்துக்கு நிதியுதவி செய்து வேண்டிய ஒழுங்குகளையும் செய்துமுடித்தார். சித்திரதேர் வெள்ளோட்ட விழாவிலே வடம் பிடிக்க மாஸ்டர் இல்லையே என நினைக்கும் பொழுது எமது கவலை சொல்லும் தரமன்று.

அன்னார் ஆத்மா சாந்தியடைவதாக

சாந்தி! சாந்தி! சாந்தி!

மயிலணி
சுன்னாகம்

திருமதி ம. திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது அன்புப் பெரியப்பா

அப்பாவுக்கு ஒரே ஒரு அண்ணர். எனக்கு ஒரே ஒரு ஆசைப்பெரியப்பாவும், குருவும். நான் மாணவப்பருவத்தில் இருந்த காலத்தில் எனக்கு ஆரம்பக் கல்வியைப் போதித்தவர். "தாயிற்சிறந்த கோயிலும் இல்லை தந்தை சொல் மிக்க மந்திரமில்லை" என்ற வாக்கிற்கேற்ப எமக்கு தந்தையாகவும் குருவாகவும் இருந்து நல் உபதேசம் செய்வார். எனக்கு பணம் தேவைப்பட்டபோதும் பண உதவி செய்வார். நான் எதனைக் கேட்டாலும் இல்லை என்று கூறாது வாரி வழங்குவார். என்னை அன்பாக "பரணீதரன்" என்று வீட்டினுள்ளே நுழையும் போது அழைப்பார். இனி யார் என்னை அழைப்பது. நானும் யாரைப் பெரியப்பா என அழைப்பது. அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல ஸ்ரீ சிவ பூதராஜர் அருளை வேண்டி வணங்குகிறேன்.

ஓம் சாந்தி! சாந்தி ! சாந்தி!

அமரரால் அன்புடன் அழைக்கப்படும்
பெறாமகன்.
க. பரணீதரன்
(19-10-98)

தேவ வாசா
சுன்னாகம் கிழக்கு
சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தாலாட்டுப் பாடித் தாயாகி நின்ற உங்களை - பால் வார்த்து பக்குவமாய் அனுப்பாத பாவியானோம் நாங்கள்**

எங்களை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு மீளாத்துயில் கொள்ளும் அன்புத் தெய்வமே, நாங்கள் தூர தேசத்தில் இருப்பதால் உங்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யக் கொடுத்து வைக்கவில்லையே என்ற கவலை எங்களை வருத்துகின்றது.

நீங்கள் எங்களை அன்போடும், பாசத்தோடும் அரவணைத்து வளர்த்தீர்கள். புத்திமதிகள் பலவற்றைப் போதித்தீர்கள். அருகில் அமர்ந்து பாட்டுக்களும், தேவாரங்களும் பாடி மகிழ வைத்தீர்கள். இவற்றை எங்களால் எப்படி மறக்க முடியும். இறுதிக்காலம்வரையும் உங்களுடன் சேர்ந்து வாழ்வதற்கு கொடுத்து வைக்க முடியாத பாவியானோம் என்று உள்ளம் தவிக்கின்றது.

எனினும், சென்ற வருடம் சிங்கப்பூரில் எங்களுடன் சந்தோசமாக உரையாடி, மகிழ்ந்ததை நினைத்து ஆறுதலடைகின்றோம். உங்களது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல மஹாமாரித்தாயைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

வெளிநாட்டில் வாழும்
மக்கள்
மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதையென்று தாத்தா நாங்கள் எழுதுவது

எழுதத் தான் எத்தனை இருக்கிறது.
அதில் எதையென்று எழுத? சொல்லித்தர நீங்கள் இல்லையே!
நீங்கள் எங்களுக்குக் கூறிய புத்திமதிகளை எழுதுவதா?
எங்களுக்கு வாங்கித் தந்த புத்தகங்களைப் பற்றி எழுதவா?
எங்களுடன் சேர்ந்து படம் பார்த்துச சிரித்ததை எழுதவா?
எங்களைக் குயில் என்றும், சிவநாராயணன் என்றும் அழைத்ததை எழுதவா?
எதையென்று தாத்தா நாங்கள் எழுதுவது?
உங்கள் ஆத்மா சாந்தியடைய எங்கள் பிரார்த்தனைக்ள்

பேரப்பிள்ளைகள்
ந. ஜனனி
ந. நிராகுலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லவர் என்றும் நல்லவர்கள்

தூய வெள்ளை ஆடையுடன் ஒருவர் சைக்கிளில் மிக ஆறுதலாக வந்து கொண்டிருக்கிறார். ஆம் சைக்கிள் நிற்பாட்டப்படுகிறது. மயிலணி முருகமூர்த்தியை வணங்குகிறார். அதிபர் கா.ஐயம்பிள்ளை அவர்கள் சைக்கிளில் திரும்பவும் புறப்படுகிறார். அவரைக் கண்டவுடன் எனது சைக்கிளின் வேகமும் குறைகிறது. அவரும் எதிரில் வந்து நிற்கிறார். எங்கள் உரையாடல் தொடர்கிறது "எப்படிப் பள்ளிக்கூடம் நடக்கிறது. O/L சித்திகள் எப்படி என்று தான் கல்வி கற்ற மயிலணி சைவ மகா வித்தியாலயத்தினைப் பற்றிய விசாரிப்புகளுடன் கல்விப்புலம் பற்றியும் ஊர் பாடசாலைகள் பற்றியும் உரையாடல் தொடர்கிறது

திடீரென ஊர் கோயில்கள் பற்றியும் திருப்பணிகள் பற்றியும் திருவிழாக்கள் பற்றியும் பேச்சுக்கள் தொடர்ந்து இறுதியில் குடும்ப நலன்கள் பற்றியும் விசாரிப்புகளுடன் இருவரும் பிரிந்து செல்வோம். இப்படியான சந்திப்புக்கள் ஊரில் அடிக்கடி நடைபெறுவதுண்டு.

கொழும்புக்கு குடியிருக்க அதிபர் கா. ஐயம்பிள்ளை அவர்கள் வந்தபின் கடந்த மாதம் அவரைச் சந்தித்து நிறைய உரையாடுவதற்குச் சென்றிருந்தேன். நீண்ட நேரம் உரையாடினேன். பேரப்பிள்ளைகளின் கல்விசம்பந்தமாகப் பெருமையுடன் கூறினார். "ஊரிலே கல்வி நிலைகள் எப்படி" கோயில்கள் விசேடங்கள் எப்படி" போன்றவற்றுடன் "வரிசப்புலம் அம்மனுக்கு தேர் செய்யத் தொடங்கிவிட்டோம். அச்சுக்குரிய பொருட்கள் இங்கிருந்து அனுப்ப வேண்டும்". என்று ஆவலாக உரையாடினார். அவரின் உரையாடலில் உறவுக்கும் அப்பால் மனித நேயம் குடிகொண்டிருப்பதை பூரணமாக காணமுடிந்தது.

ஆசிரியராக வளர்ந்த போதிலும் அதிபராக முதிர்ந்த போதிலும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றிய பணிகளை யாரும் மறுக்க முடியாது. இவரது கை எப்பொழுதும் துன்பப்படுபவர்களைத் தூக்கி விடும் கையாக இருந்தது.

சனசமூக நிலைய வளர்ச்சிக்கு இவரின் பங்கு அளவிடற்கரியது. இவர் போன்றோரின் பெருமுயற்சியால் சனசமூக நிலையத்தில் நிறைய நூல்கள் இருப்பது குறிப்பிடத்தக்கது. அது மட்டுமல்ல ஊரிலுள்ளோர் நன்கு பயனடைகிறார்கள்.

இவர் ஊரிலிருக்கும் பொழுது பிறந்தமனைக்குப் பக்கத்தில் உள்ள சிவபூதராயரையுயம், மயிலணி முருகனையும், வரிசப்புலம் மகமாரி அம்பாளையும் தினமும் வழிபடத் தவறமாட்டார்.


இவருக்கு திடீரென என்ன நடந்தது.
இறைவனுக்கு இவ்வளவு ஆசையோ

ஆம் அமரர் கா. ஐயம்பிள்ளை அவர்கள் நல்ல ஆசிரியராய் நல்ல அதிபராய் சமூகத் தொண்டராய் இறைபக்தராய் நல்ல குடும்பத் தலைவராய் வாழ்ந்த பெருமகன்.
இனி அவர் இறைபணி விண்ணிலே.

சு. துரைசிங்கம்
அதிபர்
யாழ்.'. சுன்னாகம்
மயிலணி சைவ ம. வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

"காலத்தினால் செய்த நன்றி சிறி தெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"

எங்களை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்டு இறைபதம் எய்திய எமது குடும்பத்தலைவரின் தெகிவளையில் நடைபெற்ற ஈமக்கிரியைகளில் நேரில் பங்கு கொண்டும் அனுதாபச் செய்திகள் அனுப்பியும், சுன்னாகம் சகோதரன் வீட்டுக்கும் எங்கள் பிரான்சு, இங்கிலாந்து இல்லங்களுக்கும் நேரில் வந்தும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தும் இன்னும் பல வழிகளில் உதவியவர்களுக்கும்

இன்று நடைபெறும்

**அந்தியேட்டி** கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், இந் நினைவு மலருக்கு புகழுரைகள், இரங்கல் உரைகள் எழுதிக் கொடுத்தவர்களுக்கும் எம் இதயம் கனிந்த நன்றிகள்.

36/1 A எபனேசர் பிளேஸ்,
தெகிவளை.

மனைவி
மக்கள்,மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org